**08-01-2021 காலைமுரளி ஓம்சாந்தி பாப்தாதா மதுபன்**

**சாராம்சம்:** இனிய குழந்தைகளே, நீங்கள் பிராமணர்களிலிருந்து தேவர்களாகுகின்ற போதையைக் கொண்டிருக்க வேண்டும். பிராமணர்களாகிய நீங்கள் மட்டுமே தந்தையிடமிருந்து மேன்மையான வழிகாட்டல்களைப் பெறுகிறீர்;கள்.

**கேள்வி:** இளம் இரத்தத்தைக் கொண்டிருப்பவர்கள் என்ன ஆர்வத்தையும், போதையையும் உடையவர்களாக இருக்க வேண்டும்?

**பதில்:** பழையதாகவும், கலியுகமாகவும் ஆகிவிட்ட இவ்வுலகைப் புதிய, சத்தியயுக உலகம் ஆக்குகின்ற ஆர்வமும், பழையவை அனைத்தையும் புதியதாக்குகின்ற ஆர்வமும் உங்களுக்கு இருக்க வேண்டும். குமாரிகள் இளம் இரத்தத்தைக் கொண்டிருப்பதால், அவர்கள் தங்களுக்குச் சமமானவர்களை ஈடேற்ற வேண்டும். நீங்கள் சதா இந்தப் போதையுடையவர்களாக இருக்க வேண்டும். நீங்கள் சொற்பொழிவுகள் ஆற்றுவதற்கான பெரும் போதையையும் கொண்டிருக்க வேண்டும்.

**பாடல்:** ஓ இரவு நேரப் பயணியே, களைப்படையாதீர்! விடியல் வெகு தொலைவில் இல்லை.

ஓம் சாந்தி. குழந்தைகளாகிய நீங்கள் இப் பாடலின் அர்த்தத்தைப் புரிந்துகொள்கின்றீர்கள். பக்தி மார்க்கத்தின் உச்ச இருளான இரவு இப்பொழுது முடிவிற்கு வருகிறது. நீங்கள் இப்பொழுது கிரீடங்களைப் பெறப் போகிறீர்கள் என்பதைக் குழந்தைகளாகிய நீங்கள் புரிந்துகொள்கிறீர்கள். இங்கு மனிதர்களிலிருந்து தேவர்களாக மாறுகின்ற இலக்குடனும், குறிக்கோளுடனும் நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். தன்னை ஓர் எருது எனக் கருதும்படி ஒருவருக்கு சந்நியாசி ஒருவர் கூறினார். அந்த நபரும் தான் அவ்வாறு ஆகிவிட்டதாக எண்ணினார். இராமர் குரங்குச் சேனையை எடுத்துச் சென்ற உதாரணம் உள்ளதைப் போன்று, இதுவும் பக்தி மார்க்கத்திலுள்ள ஓர் உதாரணம். நீங்கள் இரட்டைக் கிரீடதாரி தேவர்கள் ஆகுவீர்கள் என்ற ஞானத்துடன் இங்கு அமர்ந்திருக்கிறீர்கள். நீங்கள் ஒரு பாடசாலையில் கற்கும்பொழுது, ஒரு மருத்துவர் அல்லது பொறியியலாளர் ஆகுவதற்கே கற்பதாகக் கூறுகிறீர்கள். இந்தக் கல்வி மூலம் நீங்கள் தேவர்கள் ஆகுகிறீர்;கள் என்பதைப் புரிந்துகொள்கிறீர்கள். நீங்கள் உங்களுடைய சரீரத்தை நோக்கும்பொழுது, உங்களுடைய அடுத்த சரீரத்தின் தலை மீது கிரீடம் இருக்கும். இந்த உலகம் மிகவும் தூயது. புதிய உலகம் முதற்தரமானது, ஆனால் பழைய உலகம் முற்றிலும் மூன்றாந் தரமானது. இந்த உலகம் முடிவடைய உள்ளது. உலகைப் படைப்பவர் நிச்சயமாக உங்களைப் புதிய உலகின் அதிபதிகள் ஆக்குபவரே ஆவார். வேறு எவராலும் உங்களுக்கு இதனைக் கற்பிக்க முடியாது. சிவபாபா மட்டுமே உங்களுக்கு அறிவூட்டிக் கற்பிக்கிறார். தந்தை விளங்கப்படுத்தியுள்ளார்: நீங்கள் முற்றிலும் ஆத்ம உணர்வுடையவர்கள் ஆகும்பொழுது வேறு என்ன உங்களுக்குத் தேவை? எவ்வாறாயினும் நீங்கள் பிராமணர்களே. நீங்கள் தேவர்கள் ஆகுகிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். தேவர்கள் மிகத் தூய்மையாக இருந்தார்கள்! இங்கு மக்கள் மிகவும் தூய்மையற்றவர்கள். அவர்களின் முகங்கள் மனிதர்களுடையதைப் போன்றிருந்தாலும், அவர்களின் கதாபாத்திரங்கள்; எவ்வாறு உள்ளன எனப் பாருங்கள்! தேவர்களைப் பூஜிப்பவர்கள் அவர்களுக்கு முன்னால் தேவர்களின் இந்தப் புகழைப் பாடுகிறார்கள்: நீங்கள்

சகல தெய்வீகக் குணங்களும் நிறைந்தவர்களும், 16 சுவர்க்கக் கலைகள் நிறைந்தவர்களும், நாங்கள் விகாரமுள்ள பாவிகள்! அவர்களின் முகங்களும் மனிதர்களுடையதே, எனினும் அவர்கள் சென்று அவர்களின் முன்னால் இந்தப் புகழைப் பாடுகிறார்கள். அவர்கள் தங்களையிட்டுக் கூறுகிறார்கள். நாங்கள் அழுக்கானவர்களும், விகாரமுடையவர்களும். எம்மிடம் தெய்வீகக் குணங்கள் இல்லை. அவர்களும் மனிதர்களே, அதன் அர்த்தம் அவர்கள்; மனிதர்களாக இருக்கின்றார்கள் என்பதாகும். நீங்கள் மாற்றமடைந்து தேவர்கள் ஆகுவீர்கள் என்பதை இப்பொழுது புரிந்துகொள்கிறீர்கள். மக்கள் கிருஷ்ண தேசத்திற்குத் தங்களால் செல்ல முடியும் என்பதால், கிருஷ்ணரை வழிபடுகிறார்கள், எவ்வாறாயினும், தாங்கள் எப்பொழுது அங்கு செல்வார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது. கடவுள் வந்து தமது பக்தியின் பலனைத் தங்களுக்கு வழங்குவார் என நம்பியவாறு அவர்கள் தொடர்ந்தும் பக்தி செய்கிறார்கள். அனைத்திற்கும் முதலில், உங்களுக்குக் கற்பிக்கும் ஒரேயொருவரில் நீங்கள் நம்பிக்கை உடையவர்களாக இருக்க வேண்டும். இவை ஸ்ரீ ஸ்ரீ சிவபாபாவின் வழிகாட்டல்கள். சிவபாபா உங்களுக்கு ஸ்ரீமத் வழங்குகிறார். இதனைப் புரிந்துகொள்ளாதவர்களால் எவ்வாறு மேன்மையானவர்களாக முடியும்? பிராமணர்களான நீங்கள் அனைவரும் ஸ்ரீ ஸ்ரீ சிவபாபாவின் வழிகாட்டல்களைப் பின்பற்றுகின்றீர்கள். பரமாத்மா பரமதந்தையின் வழிகாட்டல்கள் மட்டுமே உங்களை மேன்மையானவர்கள் ஆக்குகின்றன. தமது பாக்கியத்தில் இது இருப்பவர்களின் புத்திகளில் மட்டுமே இது தங்கும். இல்லாவிடின், அவர்கள் எதனையும் புரிந்துகொள்ள மாட்டார்கள். அவர்கள் இதனைப் புரிந்துகொள்ளும்பொழுது மட்டுமே சந்தோஷமடைந்து, உங்களுக்கு உதவி செய்ய ஆரம்பிப்பார்கள். எதனையும் அறியாத சிலரும் இருக்கிறார்கள். அந்த ஒரேயொருவர் யார் என்பதும் அவர்களுக்குத் தெரியாது. இதனாலேயே, பாபா எவரையும் சந்திப்பதில்லை. அம்மக்;கள் தமது சொந்த வழிகாட்டல்களையே வழங்குவார்கள்! அவர்கள் ஸ்ரீமத்தைப் புரிந்துகொள்ளாததனால், அந்த ஒரேயொருவருக்கும் தங்கள் சொந்த வழிகாட்டல்களை வழங்க ஆரம்பிக்கிறார்கள். தந்தை இப்பொழுது குழந்தைகளான உங்களை மேன்மையானவர்கள் ஆக்குவதற்கு வந்துள்ளார். பாபா 5000 வருடங்களுக்கு முன்னர் செய்ததைப் போன்று மிகச்சரியாக வந்து உங்களைச் சந்தித்துள்ளார் என்பதைக் குழந்தைகளாகிய நீங்கள் புரிந்துகொள்கின்றீர்கள். இதனைப் புரிந்துகொள்ளாதவர்களால் இந்த முறையில் பதிலளிக்க முடியாது. குழந்தைகளாகிய நீங்கள் இந்தக் கல்வியையிட்டுப் பெருமளவு போதை கொண்டிருக்க வேண்டும். இது மிகவும் உயர்ந்ததோர் அந்தஸ்து, ஆனால், மாயையும் உங்களுக்கு மிகவும் எதிராக இருக்கிறாள். உங்களை இரட்டைக் கிரீடாதாரி ஆக்கக்கூடிய கல்வியை நீங்கள் கற்கிறீர்கள் என்பதைப் புரிந்துகொள்கிறீர்கள்; எதிர்காலத்தில் நீங்கள் பிறவிபிறவியாக இரட்டைக் கிரீடாதாரிகள் ஆகுவீர்கள். இதற்கு, நீங்கள் முழு முயற்சி செய்வது அவசியம். இது இராஜயோகம் என்றழைக்கப்படுகிறது. இது ஓர் அற்புதம்! பாபா எப்பொழுதும் விளங்கப்படுத்துகிறார்: இலக்ஷ்மி, நாராயணன் ஆலயங்களுக்குச் செல்லுங்கள். அங்கிருக்கும் பூஜாரிகளுக்கும் உங்களால் விளங்கப்படுத்த முடியும். அதன்பின்னர், அந்தப் பூஜாரிகளால் எவ்வாறு இலக்ஷ்மி, நாராயணன் தமது அந்தஸ்தைப் பெற்றுக் கொண்டார்கள் என்பதையும், எவ்வாறு அவர்கள் உலக அதிபதிகள் ஆகினார்கள் என்பதையும் பிறருக்கு விளங்கப்படுத்த முடியும். அவர்கள் அமர்ந்திருந்து இந்த முறையில் விளங்கப்படுத்தினால், பூஜாரிகளின் மதிப்பும் உயரும். உங்களால் அவர்களுக்குக் கூற முடியும்: எவ்வாறு இலக்ஷ்மி, நாராயணன் தமது இராச்சியத்தைப் பெற்றார்கள் என நாங்கள் உங்களுக்கு விளங்கப்படுத்துவோம். கீதை

கூறுகின்றது: கடவுள் கூறுகிறார்: நான் உங்களுக்கு இராஜயோகத்தைக் கற்பித்து, அரசர்களுக்கெல்லாம் அரசர் ஆக்குகிறேன். நீங்களே சுவர்க்க அதிபதிகள் ஆகுபவர்கள், அல்லவா? எனவே, குழந்தைகளே, நீங்கள் என்னவாகுகிறீர்கள் என்பதையிட்டு அதிகளவு போதையுற்றிருக்க வேண்டும். நீங்கள் இப்பொழுதுள்ள நிலையில் உங்கள் சொந்தப் புகைப்படம் ஒன்றையும், இராஜ ஆடையணிந்த புகைப்படம் ஒன்றையும் எடுத்துக் கொள்ளலாம். கீழே உங்கள் சாதாரணப் புகைப்படத்தை வைத்து, அதன் மேல், உங்கள் இராஜ ஆடையணிந்த புகைப்படத்தை வையுங்கள். இதில் எந்தவிதச் செலவும் இல்லை, அல்லவா? உங்களால் மிக விரைவாக இராஜ ஆடையணிய முடியும். அதனால் நீங்கள் தேவர்கள் ஆகுகிறீர்கள் என்பதை மீண்டும் மீண்டும் நினைவுசெய்ய முடியும். உச்சியில் நீங்கள் சிவபாபாவையும் வைத்துக் கொள்ளலாம். நீங்கள் இந்தப் படத்தையும் எடுத்துக் கொள்ள வேண்டும். நீங்கள் மனிதர்களிலிருந்து தேவர்களாக மாறுகிறீர்கள். நீங்கள் உங்களுடைய சரீரங்களை விடுத்ததும், சென்று, தேவர்கள் ஆகுவீர்கள், ஏனெனில் நீங்கள் இப்பொழுது இராஜயோகத்தைக் கற்கிறீர்கள். எனவே, இந்தப் புகைப்படங்கள் உங்களுக்கு உதவி செய்யும். உச்சியில் சிவபாபாவின் படத்தை வைத்திருங்கள். பின்னர், இராஜ ஆடையணிந்த உங்கள் புகைப்படத்தையும், அதன் கீழ், உங்கள் சாதாரணப் புகைப்படத்தையும் வையுங்கள். நாங்கள் சிவபாபாவுடன் இராஜயோகத்தைக் கற்று, இரட்டைக் கிரீடாதாரி தேவர்கள் ஆகுகிறோம். உங்களிடம் இந்தப் படம் இருந்தால், மக்கள் அதனைப் பார்த்து, அதனைப் பற்றி உங்களிடம் கேட்கும்பொழுது, சிவபாபாவே உங்களுக்குக் கற்பிக்கிறார் என அவர்களுக்கு நீங்கள் கூற முடியும். குழந்தைகளாகிய நீங்கள் இந்தப் படத்தைப் பார்க்கும்பொழுது, போதையுற்றிருப்பதை உணர்வீர்கள். நீங்கள் உங்களுடைய கடையிலும் இந்தப் படத்தை வைக்கலாம். பாபா பக்தி மார்க்கத்தில் இருந்தபொழுது, நாராயணனின் படத்தை வைத்திருந்தார். அவர் தனது சட்டைப் பையிலும் ஒரு படத்தை வைத்திருந்தார். நீங்களும் உங்கள் சொந்தப் புகைப்படத்தை வைத்திருக்க வேண்டும். அப்பொழுது நீங்கள் தேவர்கள் ஆகப் போகிறீர்கள் என்பதை நினைவுசெய்வீர்கள். நீங்கள் தந்தையை நினைவுசெய்வதற்கான வழிகளையும் கண்டுபிடிக்க வேண்டும். நீங்கள் தந்தையை மறக்கும்பொழுதே, வீழ்கிறீர்கள். நீங்கள் விகாரத்தில் வீழ்ந்தால், உங்களால் தேவர் ஆகமுடியவில்லை என்பதையிட்டு அவமானம் அடைவதுடன், உங்களுக்கு இதய வழுவலும் ஏற்படும். நான் எவ்வாறு இப்பொழுது ஒரு தேவராக முடியும்? பாபா கூறுகிறார்: விகாரத்தில் வீழ்ந்துள்ளவர்களின் புகைப்படங்களை நோக்குங்கள்! அவர்களுக்குக் கூறுங்கள்: நீங்கள் சுவர்க்கத்திற்குச் செல்வதற்குத் தகுதி வாய்ந்தவர்களல்ல. உங்கள் கடவுச்சீட்டுகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. தாங்கள் இப்பொழுது வீழ்ந்து விட்டதை உணர்ந்து, 'நான் எவ்வாறு சுவர்க்கத்திற்குச் செல்ல முடியும்?' என அவர்கள் தங்களைத் தாங்களே வினவுவார்கள். நாரதரின் உதாரணமும் உள்ளது. அவர் இலக்ஷ்மியைத் திருமணம் செய்வதற்குத் தகுதிவாய்ந்தவரா என்பதைக் காண்;பதற்குத் தனது சொந்த முகத்தைப் பார்க்கும்படி அவருக்குக் கூறப்பட்டது. அவர் ஒரு குரங்கின் முகத்தையே கண்டார். இந்த விகாரங்களை உடையவர்களாக இருப்பதையிட்டு, மக்கள் வெட்கமடைவார்கள். எனவே, எவ்வாறு அவர்களால் ஸ்ரீ நாராயணனை அல்லது ஸ்ரீ இலக்ஷ்மியைத் திருமணம் செய்ய முடியும்? பாபா உங்களுக்குப் பல வழிமுறைகளைக் காட்டுகிறார். எவ்வாறாயினும், நீங்களும் சிறிது நம்பிக்கையும் வைக்க வேண்டும்! விகாரத்தின் போதை இருக்கும்பொழுது, தங்;களால் அரசர்களுக்கெல்லாம் அரசராகவும், இரட்டைக் கிரீடாதாரியாகவும் ஆகுவது சாத்தியமில்லை என அவர்களால் புரிந்துகொள்ள முடியும். ஒருவர் சில முயற்சியைச் செய்ய

வேண்டும்! பாபா தொடர்ந்தும் உங்களுக்கு விளங்கப்படுத்துகிறார். அத்தகைய வழிமுறைகளை உருவாக்கி, தொடர்ந்தும் அனைவருக்கும் விளங்கப்படுத்துங்கள். இராஜயோகத்தினூடாக இப்பொழுது ஸ்தாபனை இடம்பெறுகிறது. விநாசம் முன்னால் உள்ளது. நாளுக்கு நாள், புயல்கள் மேலும் மேலும் சக்திவாய்ந்தவை ஆகும். குண்டுகள் போன்றவையும் தயாரிக்கப்படுகின்றன. நீங்கள் எதிர்காலத்தில் உயர்ந்ததோர் அந்தஸ்தைக் கோருவதற்கு இக் கல்வியைக் கற்கிறீர்கள். ஒரேயொரு தடவையே நீங்கள் தூய்மையற்றவர்களிலிருந்து தூய்மையானவர்கள் ஆகுகிறீர்கள். கல்லுப்புத்திகளைக் கொண்டிருப்பதனால், தாங்கள் நரகவாசிகள் என்பதை மக்;கள் புரிந்துகொள்வதில்லை. நீங்கள் இப்பொழுது கல்லுப்புத்திகளை உடையவர்களிலிருந்து தெய்வீகப் புத்தி உடையவர்களாக மாறுகிறீர்கள். அவர்களின் பாக்கியத்தில் இருந்தால், அவர்களால் மிக விரைவாக இதனைப் புரிந்துகொள்ள முடியும். இல்லாவிடின், எவ்வளவிற்கு நீங்கள் உங்கள் தலைகளை அடித்துக் கொண்டாலும், அது அவர்களின் புத்திகளில் தங்காது. அவர்கள் தந்தையை அறியாவிடின், அவர்கள் நாஸ்திகர்கள், அதாவது, அவர்கள் அநாதைகள். எனவே, அவர்கள் சிவபாபாவின் குழந்தைகள் ஆதலால், நீங்கள் அவர்களைப் பிரபுவும் அதிபதியுமானவருக்கு உரியவர்களாகுமாறு செய்ய வேண்டும். இந்த ஞானம் உடையவர்கள் தொடர்ந்தும் தமது குழந்தைகளை விகாரத்திலிருந்து பாதுகாப்பார்கள். அறியாமையிலுள்ள மக்கள் தாம் சிக்கிக் கொண்டதைப் போல், தமது குழந்தைகளையும் தொடர்ந்தும் சிக்கிக் கொள்ளுமாறு செய்வார்கள். நீங்கள் இங்கு விகாரத்தில் இருந்து பாதுகாக்கப்படுகிறீர்கள் என்பதை அறிவீர்கள். குமாரிகளே முதலில் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களின் பெற்றோர் தமது குழந்தைகளை விகாரத்திற்குள் தள்ளுகிறார்கள். இவ்வுலகம் சீரழிந்துள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். அவர்கள் மேன்மையானதோர் உலகை விரும்புகிறார்கள். கடவுள் கூறுகிறார்: அனைவரும் சீரழிந்துள்ள வேளையிலேயே, அவர்கள் அனைவரையும் மேன்மையானவர்கள் ஆக்குவதற்கு நான் வருகிறேன்; நான் அனைவரையும் ஈடேற்றுகிறேன். கீதையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது: கடவுள் சாதுக்கள், புனிதர்கள் அனைவரையும் ஈடேற்றுவதற்கு வருகிறார். ஒரேயொரு கடவுள் மட்டுமே வந்து அனைவரையும் ஈடேற்றுகிறார். எவ்வாறு மனிதர்களின் புத்திகள் கல்லாக மாறியுள்ளன என நீங்கள் இப்பொழுது அதிசயப்படுகிறீர்கள். இந்தப் பிரபலமான நபர்கள் அனைவரும் கீதையின் கடவுள் சிவனே என்பதை இப்பொழுது அறிந்தால், என்ன நிகழும் என என்றுமே உங்களுக்கே தெரியாது! விரக்திக்; குரல்கள் ஒலிக்கும்! எவ்வாறாயினும், அதற்கு இன்னமும் நேரம் உள்ளது. இல்லாவிடின், அவர்களின் குழுக்கள் சடுதியாக நிலைகுலைந்து விடும். பலரின் சிம்மாசனங்கள் ஆடுகின்றன! யுத்தம் ஒன்று நிகழும்பொழுது, ஒருவரின் சிம்மாசனம் ஆட்டங் காண ஆரம்பித்து, அவர் கீழிறங்குவார் என்;பதை உங்களால் கூற முடியும். அவர்கள் இப்பொழுதே ஆட்டங் கண்டால், அதிகளவு குழப்பம் ஏற்படும். எதிர்காலத்தில் இவ்வாறு நிகழும். அனைவருக்கும் சற்கதி அருள்பவரான, தூய்மையாக்குபவர் கூறுகிறார்: நான் உண்மையில் பிரம்மாவின் சரீரத்தினூடாக ஸ்தாபனையை மேற்கொள்கிறேன். ‘அனைவருக்கும் சற்கதி’ என்றால் அவர் அனைவரையும் ஈடேற்றுகிறார் என்று அர்த்தமாகும். கடவுள் பேசுகிறார்: இந்த உலகம் தூய்மையற்றது. நான் அனைவரையும் ஈடேற்ற வேண்டும். அனைவரும் இப்பொழுது தூய்மையற்றவர்கள். தூய்மையற்ற ஒருவரால் எவ்வாறு அனைவரையும் தூய்மையாக்க முடியும்? அனைத்திற்கும் முதலில், தனது சூட்களை அவ்வாறு ஆக்குவதற்கு முன்னர், அவர் தூய்மையாக வேண்டும். நீங்கள் சொற்பொழிவுகள் ஆற்றும்பொழுது பெருமளவு போதை உடையவர்களாக இருப்பது

அவசியம். குமாரிகளாகிய உங்களுக்குப் புதிய இரத்தம் உள்ளது. நீங்கள் பழையதிலிருந்து புதியவர்களாக மாறுகிறீர்கள். பழைய, கலியுகத்தவர்களாக ஆகிவிட்ட ஆத்மாக்களாகிய நீங்கள், இப்பொழுது மாசு நீக்கப்படுவதால், புதிய, சத்திய யுகத்தவர்கள் ஆகுகிறீர்கள். எனவே, குழந்தைகளான நீங்கள் பெரும் ஆர்வத்தைக் கொண்டிருக்க வேண்டும். நீங்கள் சதா போதை கொண்டவர்களாக இருக்க வேண்டும். நீங்கள் உங்களுக்குச் சமமானவர்களை ஈடேற்ற வேண்டும். 'அன்னை குரு' என்பது நினைவுகூரப்படுகிறது. ஒரு தாய் எப்பொழுது குரு ஆகுகிறார் என இப்பொழுது உங்களுக்குத் தெரியும். ஜெகதாம்பா பின்னர் ஓர் இளவரசி ஆகுகிறார். அங்கு குருமார்கள் கிடையாது. குருமார்களின் விவகாரம் இந்த வேளையிலேயே உள்ளது. தந்தை வந்து ஞானாமிர்தக் கலசத்தைத் தாய்மார்கள் மீது வைக்கிறார். ஆரம்பத்திலிருந்து அது அவ்வாறே உள்ளது. எமக்கு ஒரு பிரம்ம குமாரி வேண்டும் எனத் தமது நிலையங்களுக்கு அவர்கள் கேட்கிறார்கள். பாபா கூறுகிறார்: நீங்களே அதை நடத்த வேண்டும்! உங்களுக்குத் தைரியம் கிடையாதா? அவர்கள் கூறுகிறார்கள்: இல்லை பாபா! எமக்கு ஓர் ஆசிரியர் வேண்டும். மரியாதை அளிப்பதும் நல்லதே. தற்காலத்தில், உலகிலுள்ள மக்கள் ஒருவருக்கொருவர் செயற்கையான மரியாதையையே அளிக்கிறார்கள்! இன்று, அவர்கள் ஒருவரைப் பிரதம மந்திரி ஆக்குகிறார்கள், நாளை அவர்கள் அவரை அதிலிருந்து நீக்குகிறார்கள். எவரும் நிரந்தரமாக மரியாதையைப் பெறுவதில்லை. இவ் வேளையில், குழந்தைகளாகிய நீங்கள் உங்களுடைய நிரந்தரமான இராச்சிய பாக்கியத்தைப் பெறுகிறீர்கள். பாபா குழந்தைகளாகிய உங்களுக்குப் பல்வேறு வழிகளில் விளங்கப்படுத்துகிறார்! உங்களைச் சதா மலர்;ச்சியுடன் வைத்திருப்பதற்கு, பாபா பல்வேறு வழிகளை உங்களுக்குக் காட்டுகிறார். நீங்கள் நல்லாசிகளைக் கொண்டிருக்க வேண்டும்: ஓ! நான் இந்த இலக்ஷ்மி, நாராயணனைப் போன்றவர் ஆகுகிறேன்! எவ்வாறாயினும், அது அவர்களின் பாக்கியத்தில் இல்லாவிடின், அவர்கள் என்ன முயற்சியைச் செய்வார்கள்? நீங்கள் செய்ய வேண்டிய முயற்சியை பாபா உங்களுக்குக் காட்டுகிறார். முயற்சி ஒருபொழுதும் வீணாகாது. அது எப்பொழுதும் பயனுள்ளது. எவ்வாறாயினும், இராச்சியம் ஸ்தாபிக்கப்படும். மகாபாரத யுத்தத்தின் மூலம் விநாசம் இடம்பெற வேண்டும். நீங்கள் மேற்கொண்டு முன்னேறி, உறுதியானவர்கள் ஆகும்பொழுது, அவர்கள் அனைவரும் வருவார்கள். அவர்கள் இப்பொழுது எதனையும் புரிந்துகொள்வதில்லை. இல்லாவிடின், அவர்கள் தமது இராச்சியத்தை இழப்பார்கள். பல குருமார்கள் இருக்கிறார்கள்! ஏதாவதொரு குருவினைப் பின்பற்றாத மனிதர்கள் எவரும் கிடையாது. இங்கு, நீங்கள் உங்களுக்குச் சற்கதியை அளிக்கின்ற, ஒரேயொரு சற்குருவைக் கண்டடைந்துள்ளீர்கள். உங்களிடமுள்ள படங்கள் மிகவும் சிறந்தவை. அது சந்தோஷ தாமமாகிய, சற்கதியும், அது முக்தி தாமமும் ஆகும். உங்கள் புத்தி கூறுகிறது: ஆத்மாக்களாகிய நாங்கள் அனைவரும் நிர்வாண தாமத்தில் வசிக்கிறோம். அங்கிருந்தே நாங்கள் இந்தப் 'பேசும்' உலகிற்கு வந்தோம். நாம் அந்த இடத்து வாசிகள் ஆவோம். இந்த நாடகம் பாரதத்தை அடிப்படையாகக் கொண்டது. இங்கு சிவனின் பிறந்தநாள் கொண்டாடப்படுகிறது. தந்தை கூறுகிறார்: நான் இப்பொழுது வந்துள்ளேன், நான் அடுத்த கல்பத்தில் மீண்டும் வருவேன். ஒவ்வொரு 5000 வருடங்களும், தந்தை வந்த பின்னர், அது வைகுந்தம் ஆகுகிறது. கிறிஸ்துவிற்குப் பல வருடங்களுக்கு முன்னர், சுவர்க்கமாகிய வைகுந்தம் இருந்ததாகக் கூறப்படுகிறது. அது இப்பொழுது இல்லை. ஆனால் அது மீண்டும் வர வேண்டும். எனவே, நிச்சயமாக, சுவர்க்கவாசிகளுக்கு ஸ்தாபனையும், நரகவாசிகளுக்கு விநாசமும் இருக்க வேண்டும். நீங்கள் இப்பொழுது சுவர்க்கவாசிகள் ஆகுகிறீர்கள். நரகவாசிகள் அனைவரும் அழிக்கப்படுவார்கள்.

இன்னமும் நூறாயிரக்கணக்கான வருடங்கள் இருப்பதாக அந்த மக்கள் எண்ணுவதால், தமது குழந்தைகள் வளர்ந்து, அவர்களுக்குத் திருமணம் செய்து வைப்பதற்கு அவர்கள் காத்திருக்கிறார்கள். நீங்கள் இவ்வாறு கூறுவதில்லை. உங்கள் குழந்தைகள் உங்கள் அறிவுரையைப் பின்பற்றாவிடின், நீங்கள் ஸ்ரீமத்தைப் பெற வேண்டும். வினவுங்கள்: அவர்கள் சுவர்க்கவாசிகள் ஆகாவிட்டால், நாங்கள் என்ன செய்ய வேண்டும்? தந்தை பதிலளிப்பார்: அவர்கள் கீழ்ப்படிவற்றவர்களாக இருந்தால், அவர்களை விட்டு விடுங்கள். எவ்வாறாயினும், உங்களிடம் மிக உறுதியான பற்றினை அழித்ததொரு ஸ்திதி இருப்பது அவசியம். அச்சா.

இனிமையிலும் இனிமையான, அன்புக்குரிய, எப்போதோ தொலைந்து இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளுக்கு உங்கள் தந்தை தாயாக இருக்கும் பாப்தாதாவின் அன்பும் நினைவுகளும் காலை வந்தனங்களும். ஆன்மீகத் தந்தை ஆன்மீகக் குழந்தைகளுக்கு நமஸ்தே சொல்கிறார்.

**தாரணைக்கான சாராம்சம்:**

1. ஸ்ரீ ஸ்ரீ சிவபாபாவின் மேன்மையான வழிகாட்டல்களைப் பின்பற்றி, உங்களை மேன்மையானவர்கள் ஆக்குங்கள். உங்கள் சொந்த மனதின் கட்டளைகளை ஸ்ரீமத்துடன் கலக்காதீர்கள். இந்த இறை கல்வியின் போதையைப் பேணுங்கள்.
2. உங்களுக்குச் சமமானவர்களுக்கும் நன்மையளிக்கும் வழிகளை உருவாக்குங்கள். ஒருவருக்கொருவர் நல்லாசிகளைக் கொண்டிருக்கும்பொழுது, ஒருவருக்கொருவர் செயற்கையாக அன்றி, உண்மையான மரியாதையை வழங்குங்கள்.

**ஆசீர்வாதம்:** நீங்கள் ஆன்மீக அப்பியாசத்தைச் செய்வதாலும், சுய கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதாலும் ஒரு தேவதை ஆகி, சூட்சுமத்தை அனுபவம் செய்வீர்களாக.

சூட்சுமமான புத்தியும், இலேசான தன்மையுமே பிராமண வாழ்வின் ஆளுமைகள் ஆகும். சூட்சுமமே மகத்துவமானது. எவ்வாறாயினும், இதற்கு, ஒவ்வொரு நாளும் அமிர்தவேளையில், ஆன்மீக அப்பியாசத்தைச் செய்து, வீணான எண்ணங்கள் எனும் உணவை எடுக்காதிருப்பதில் முன்னெச்சரிக்கை எடுங்கள். சுய கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதான, இந்த முன்னெச்சரிக்கையை எடுங்கள், எந்த நேரத்திலும், நீங்கள் அந்நேரத்தில் கொண்டிருக்க வேண்டிய எண்ணங்கள் எனும் உணவை மாத்திரமே எடுங்கள். வீணான எண்ணங்கள் எனும் மேலதிக உணவு எதனையும் கொண்டிருக்காதீர்கள், அப்பொழுது மாத்திரமே நீங்கள் சூட்சுமமான புத்தியைக் கொண்டிருப்பதுடன், உங்களால் தேவதை ரூபம் ஆகுகின்ற இலக்கை அடையவும் முடியும்.

**சுலோகம்:** ஒவ்வொரு விநாடியும், ஒவ்வோர் அடியிலும் மிகச்சரியாக ஸ்ரீமத்தைப் பின்பற்றுபவரே, ஒரு மகாத்மா ஆவார்.

**---ஓம் சாந்தி---**